# வைத்திய

சித்திரப் படங்களுடன் கூட . . . ந்த
மான ஓர் மாதாந்தத் தமிழ . . . ரிகை.

புத். 1. } 1910-ஞ ஜூன்மீ 1வ. { நெ. 2.


## பத்திராதிபர் குறிப்பு.

நமது பிரிய சந்தா நேயர்களே!

இந்தியாவில் பிரசுரமாகும் இத்தகைய பத்திரிகைகளைப்பார்த்தவர்களுக்கு இதின் சந்தாத்தொகையாகிய ரூபாய் ஒன்று மிகச்சொற்பமென்பது கரதலாமலகம்போல் விளங்கும். பத்திரிகையை நடத்துவதின் கஷ்டமும், நஷ்டமும் யாவருமறிந்ததே. நமது "வைத்தியபோதினியின்" அபிவிர்த்தியெல்லாம் "சிறுதுளி பெருவெள்ளம்" என்பதுபோல் நமது நேயர்களுடைய முயற்சியிலும், உதவியிலும் அடங்கியிருக்கிறதேயன்றி நமது சொந்த அற்பமுயற்சியால் முடிகிறகாரியமல்ல வென்பதை நமது நேயர்கள் அறியவேண்டியது. நமது பத்திரிகையை மற்றவர்களுக்குக்காண்பித்து புதிய சந்தாதாரர்களைச் சேர்த்து விடுவோர்க்கு பாரதமாதா அருள் புரிவாளாக!

நமது சந்தாநேயர்கள் ஒவ்வொருவரும் தத்தம் சக்திக்கியன்றவாறு, சந்தாதாரர்களைச்சேர்த்து விடுவார்களாயின் மேகம் பூமிக்குச்செய்யும் உதவிபோலாகும். நம்மால் இயற்றப்பட்டுள்ள "சுதேசவைத்திய ரத்தினம்" என்னும் புத்தகவிஷயமாக திருநெல்வேலி ஜில்லாவில் உழைத்துவரும் ரெவுனியுசெட்டில் மெண்டைச் சேர்ந்த மிஸ்டர் A. நாராயண ஐயங்கார் அவர்களுக்கு மிக்கநன்றிசெலுத்தக்கடமைப்பட்டிருக்கிறோம்.

...விஷயமாய் எடுத்துக்கொண்
...நமது பத்திரிகை விஷயத்
...டுக்கொண்டுவருவார்களென்

...பார்க்கிலிருக்கும் நமது பத்தி
...மசாமி படையாச்சி அவர்கள்
...இப்பத்திரிகையை காண்பித்து
...ர்களென்று எதிர்பார்க்கிறோம்.

---

## ... அல்லது கபாலம்.

### ஆங்கிலத்தில் (Skull—ஸ்கல்).

(மே மாதத்திய சஞ்சிகையின் 4-வது பக்கத்தின் தொடர்ச்சி.)

சிரசு அல்லது கபாலம், முகம் என இரண்டு பிரிவுகள் உள்ளது. இவற்றில் கபாலத்தில் எட்டு எலும்புகளும் முகத்திற் பதினான்கு எலும்புகளும் இருக்கின்றது. கபால எலும்புகளாவன:— (1) Occipital Bone, ஆக்ஸிபிடல் போன் இதுவே பிடரி எலும்பு; (2) Parietal Bone, பெரைடல் போன் இதுவே பித்திகை எலும்பு; (3) Frontal Bone, பிரன்டல் போன் இதுவே நெற்றி எலும்பு; (4) Temporal Bone, டெம்பிரல் போன் இதுவே காதெலும்பு; (5) Spehe-noid Bone, ஸ்பினாயிட் போன் இதுவே வவ்வாலெலும்பு; (6) Ethmoid Bone, எத்மாயிட் போன் இந்த எலும்பு செல்லரித்ததுபோல நேத்திரக்குழிகளிரண்டுக்கும் மத்தியஸ்தானத்தில், மூச்சின் மேற்புறத்தில் அமைந்திருக்கிறது. (7 & 8) Turbinated Bones, டர்பினேடெட் போன்ஸ், என்னும் எலும்புகள் இரண்டு ஆக மொத்தம் காபால எலும்புகள் எட்டு. முகத்தெலும்புகளாவன:— (1 & 2) Nasal Bones, நேஸல் போன்ஸ் இதுவே மூக்கெலும்புகள் இதில் 2 எலும்புகளும்; (3 & 4) Superior Maxillary Bones, சுபீரியர் மாக்ஸிலெரி போன்ஸ் இதுவே மேல்தாடை எலும்புகள் இதில் 2 எலும்புகளும்; (5 & 6) Lachrymal Bones, லாச்சிரமல் போன்ஸ் இவ்விரண்டெலும்புகளும் கண் குழிக்கு அகத்தில் முன்பாக இருக்கின்றன; (7 & 8) Malar Bones, மெலார் போன்ஸ் இதுவே கன்னத்தெலும்புகள் இதில் 2 எலும்புகளும்; (9 & 10) Palate Bones, பாலெட் போன்ஸ் இதுவே அண்ணத்தெலும்புகள் இதில் இரண்டு எலும்புகளும், (11 & 12) இன்பீரியர்டர்த்னேடெட் போன்ஸ், இதுவும் இரண்டு எலும்

புகளாகவே இருக்கின்றன; (13) Vomer, ஓமர் இதுவே நாசியின் மத்தியில் சன்னமாய், தட்டையாய் நாற்சதுரமாய் நாஸித்துவாரங்கள் இரண்டிற்கும் மத்தியில் இருக்கும் ஓர் எலும்பு; (14) Lower Jaw Bone, லோயர் ஜா போன் இதுவே கீழ்தாடை எலும்பு ஆக மொத்தம் முக எலும்புகள். பதினான்கு.

## பற்கள்.

### ஆங்கிலத்தில் (Teeths—டீத்ஸ்.)

இவற்றைத்தவிர முப்பத்திரண்டு பற்களிருக்கின்றன, முதல்முதல் முளைக்கிற பற்களுக்கு பால் பற்கள் என்றும் ஆங்கிலத்தில் Milk teeth, மில்க் டீத் என்றும், அவைகள் விழுந்து இரண்டாந்தரம் முளைக்கிறவைகளுக்கு ஸ்திரபற்கள் Permanent teeth; பெர்மெனென்ட் டீத் என்றும் சொல்லப்படும். குழந்தைகளுக்கு 20 பற்களுண்டு அவைகளாவன:—முன் பற்கள் 8, கோரைப்பற்கள் 4, கடைவாய்ப்பற்கள் 8 ஆக இருபதாம். ஸ்திரப்பற்கள் 32 அவைகளாவன:—முன் பற்கள் 8, கோரைப்பற்கள் 4, கடவாய்ச்சிறியபற்கள் 8, கடவாய்ப்பெரியபற்கள் 12 ஆக முப்பத்திரண்டாம். பல்லில முக்கியமாய் இரண்டுவித பதார்த்தங்களுண்டு. பற்சிகரத்தை மேலாகச்சுற்றிக்கொண்டு வெள்ளையாயும் உறுதியாயுமிருக்கிற பதார்த்தத்துக்கு ஆங்கிலத்தில் (Enamel— இனுமெல) என்று சொல்லப்படும். பல்லின் சிகரத்துக்குள் ஓர் பள்ளமுண்டு, அதில் சவ்வு (Pulp—பல்ப்) பரவியிருக்கும். அந்தச்சவ்வானது வேரின் துவாரத்திலிறங்கி வேரின் வெளிப்புறமாய் இருக்கிற சவ்வுடன் கலந்துவிடும்.

குழந்தைகளுக்குப்பல் முளைக்கிற காலக்கிரமமாவது.—7-ம் மாதம், மத்திய முன்பற்கள் 2 முளைக்கும். 2 Middle incisors. 9-ம் மாதம், பக்கத்து முன் பற்கள் 2 முளைக்கும் 2 Lateral incisors. 12-ம் மாதம், கடைவாய்ச்சிறியமுன் பற்கள் முளைக்கும், First Molars. 18-ம் மாதம், கோரைப்பற்கள் முளைக்கும், Canine—24-ம் மாதம் கடைவாய்ச்சிறிய பின் பற்கள் முளைக்கும், 2-last Molars. ஆனால் மேற்சொன்ன காலக்கிறமப்படி குழந்தைகளுக்குப்பற்கள் ஒரே நிதானமாய் முளைக்கிறதில்லை; சிலருக்குச்சீக்கிரத்திலும், சிலருக்குத்தாமசப்பட்டும் முளைக்கும். ஸ்திரப்பற்கள் முளைக்கும் காலக்கிரமமாவன:— $6\frac{1}{2}$ வயதில், கடைவாய்ப்பெரிய முதற்பற்கள் முளைக்கும் இதை (First Molars, பஸ்ட் மொலேர்ஸ்)

என்று சொல்லப்படும். 7-ம் வயதில், மத்திய முன்பற்கள் 2 முளைக்கும். இதை (Middle incisors, மிடில் இன்ஸைஸர்ஸ்) என்று சொல்லப்படும், 8-ம் வயதில், பக்கத்து முன்பற்கள் 2 முளைக்கும் இதை (2 Lateral incisors) என்று சொல்லப்படும். 9-ம் வயதில் கடைவாய்ச்சிறிய முதற்பற்கள் முளைக்கும், இதை (First Bicuspids, பஸ்ட் பைகஸ்பிடஸ்) என்று சொல்லப்படும். 10-ம் வயதில், கடைவாய்ச்சிறிய இரண்டாவது பற்கள் முளைக்கும். இதை (Second Bicuspides, ஸெகன்ட் பைகஸ்பிடஸ்) என்று சொல்லப்படும். 11 முதல் 12-ம் வயதில் கோரைப்பற்கள் முளைக்கும். இதை (Canine, கெனைன்) என்று சொல்லப்படும். 12 முதல் 13-ம் வயதில் கடைவாயில் பெரிய இரண்டாவது பற்கள் முளைக்கும் இதை (Second Molars, ஸெகன்ட் மொலேர்ஸ்) என்று சொல்லப்படும். 17முதல் 21-ம் வயதில், கடைவாயில் கடைப்பற்கள் அதாவது ஞானப்பற்கள் (Last Molars, லாஸ்ட் மொலேர்ஸ்) அல்லது (Wisdom Teeth, விஜ்டம் டீத்) என்னும் பற்கள் முளைக்கும்.

## நாக்கெலும்பு.

### ஆங்கிலத்தில் (Hyoid Bone—ஹையாட்போன்.)

சிவந்த சிறிய மாமிசத்துண்டாகிய நாக்கு, நாம்பேசுவதற்கும், ருசியை அறிவதற்கும், புசிப்பதற்கும் உபயோகப்படுகிறது. நாக்கில் நரம்புகள் கணக்கிடமுடியாதவிதமாய் ஒன்றோடொன்று பின்னிக்கொண்டிருக்கிறது. அப்படியிருந்தும் அது எவ்வளவு விரைவாய் புரண்டு கொடுக்கிறது. நாக்கினடியில் ஓரெலும்புண்டு. அதற்கு நாக்கெலும்பென்று பேர், அதன் மத்தியில் தட்டையாய் இருக்கிறபாகத்திற்கு உடல் என்றும், பிதுக்கங்களுக்கு கொம்புகள் என்றும் பேர். நாக்கெலும்புக்கும் குரல்வளைக்கும மத்தியில் ஓர் சவ்வுண்டு அதற்கு (Thyro-hyoidean membrane, தைரோ ஹையாய்டியன் மெம்பிரேன்) என்று பேர் நாக்கின் கீழ்பாகத்தில் சிறிய முனைகள் போன்ற சில பாகங்கள் இருக்கிறது. அவைகளிலிருந்து நரம்புகள் மூளைக்கு ஓடி ஷட்ரசங்களைப்பகுத்தரியும்படியான உணர்வை உண்டாக்குகின்றன. ஆகாரத்தைப்பரிக்ஷித்துப்பார்ப்பதற்குக்கண், மூக்கு. வாய் என்னும் மூன்று விசாரணைக்காரர் இருக்கிறார்கள். அவைகளில் கண்ணானது பொருளின்மேல் பார்வையையும், மூக்கானது போஜனபதார்த்தங்களின் பரிமளத்தை

யும், வாயானது பதார்த்தங்களின் உருசி பாகத்தையும் அறிந்துவரும். நாம் ஆகாரத்தை மெல்லும்போது அந்தந்தப்பற்களுககுத்தகுந்த பதார்த்தங்களை நாக்கானது அததின் கீழ் தள்ளிக்கொடுத்து உதவிசெய்து, மிறுது பதார்த்தங்களை அன்னத்தின்மேல் வைத்து நசுக்கி வாயிலூருகின்ற உமிழ் நீரோடு (Saliva) செவ்வையாய்க்கலக்கும்படி செய்கின்றது. புசிப்புக்கு நாக்கின் உதவி இல்லாவிடின் நாம் பசியடங்க புசிப்பதற்குமுன்னமேல் தாடைகள் மிகவும் நோவெடுக்கும். போஜனங்களை விழுங்குவதும் அசாத்தியமாய்விடும். மென்றபிறகு வாயிலுள்ள உணவையெல்லாம் நாக்குத்தான் ஒன்றாய்ச்சேர்த்துத்தொண்டைக்குள் தள்ளுகின்றது. நாக்குக்கு ருசியரியும் உணர்ச்சி இருக்கின்றமையால் வயிற்றுக்காகாததும், விஷத்தன்மையுள்ளனவும், புராதனமுமான உணவுகளை உண்ணவொட்டாமல் தடுக்கின்றது. ஆரோக்கியமான உணவு இன்னதென்று நாம் கண்டறிந்து புசிக்கும்படிக்கும், வாசனை அறியும் சக்தியையொத்த ருசி அறியும் சக்தியும் நமக்குக்கொடுக்கப்பட்டிருக்கின்றது. நாக்குக்கு மற்றொரு சக்தி உண்டு. அதாவது பேசும் தன்மையேயாம், சைகைகளினாலும், முகக்குறிப்புகளினாலும் நாம் நம்முடைய எண்ணங்களை மற்றவர்களுக்கு ஏறத்தாழ அறிவிக்கக்கூடும். நாய் தான் சந்தோஷமாயிருப்பதைக் காட்டுவதற்கு வாலை



ஆட்டும். பிராணிகள் சப்தம் போட்டுக்கத்தும். பக்ஷிகள் பாடும், ஆனால் மனிதன் ஒருவனே வாய் விட்டுப்பேசும் வரத்தைப் பெற்றவன். நாம் பேசும் தொனியானது கண்டத்தில் பிறக்கின்றது. கண்டத்தில் தொனியுண்டாகிற விதமாவது, சுவாசப்பையிலிருக்கிற வாயுவானது ஊர்த்த முகமாய் வெளிப்படுகிறபோது, தொனித்தந்திகள் அதிர்ந்து, தொனி பிறக்கின்றது. அந்தத்தொனியாகிய வாயு, வாய்க்குள்வந்து, நாக்கு, பற்கள், உதடுகள், நாசி இவைகளுடைய சகாயத்தால், விகர்ப்பப்பட்டு எழுத்து, அசை, சொல் முதலியவைகளை உண்டாக்குகின்றது. குழந்தைகளுக்கும், பெண்களுக்கும் கண்டம் சிறுத்திருப்பதால் அவர்களுடைய தொனி அதிகரித்திருக்கும், சங்கீதத்திலும் ஸ்திரீ கண்டத்தை விசேஷமாய்ச் சொல்வதும் இதன் கருத்தேயன்றி வேறல்ல. ஆதலால் இவ்வளவு உபயோகமுள்ள இவ்வருமையான நாக்குக்கு நேரிடும் ஊமை, திக்குவாய், குளறிப்பேசுதல், இன்னும் கை கால் அசைவற்றுப்போகிற

ஓர் ஜாதி வாதரோகம் (Paralysis, பொராலிஸஸ்) பாரிசவாதம் அதாவது அர்த்தாங்கவாதம் (Hemiplegia, ஹெமிபிளீஜியா) அர்த்திதவாத ரோகம் அதாவது அர்த்தமுகவாதம (Paralysis of the face) முதலிய நோய்களில் நாக்கின் நரம்புகள் உள்ளுக்கு இழுத்துக்கொள்ளுவதினால் நாக்குக்கு சப்திக்கும் சக்தியற்றுப்போகிறது.

(தொடரும்).

---

## காந்தப்பார்வை.

**(மேமாத சஞ்சிகையின் 9-ம் பக்கத்தொடர்ச்சி.)**

இவ்வித அப்பியாசம் செய்து வருகையில் எவரையும் நேரில் நோக்கி அவர்கள் கண்களுக்குள் பார்த்துப் பேசுவாயானால் அவர்களுடைய அல்லது உன்னுடைய அந்தரங்க ஆத்மாவில் ஓர் வித அசைவு தோன்றும். பாயும் சக்தி உன்னிலும், தாங்கும் சக்தி அவர்களிலும் அதிகரித்திருக்குமானால் அவர்கள் மனதில் ஓர் வித அசைவு தோன்ற, உன் பார்வையைத் தாங்கமுடியாதவர்களாய் தமது பார்வையை அப்புரப்படுத்திக் கீழாக அல்லது பக்கத்தில் வேறே வஸ்துவைப் பார்ப்பார்கள். அவர்களிடத்தில் பாயும் சக்தி அதிகமாயிருக்குமாயின் உன்னால் தாங்கமுடியாது. இந்த அற்புத சக்தியின் வல்லமையை அடிக்கடி பரிக்ஷித்துப்பார். இதன்பின், காந்ததிருஷ்டியின் தன்மையை அதிகரிக்கச் செய்ய ஏதாவது ஒரு விஷயத்தை மனதில் தீர்மானித்துக்கொண்டு பார்க்கப்பழகு, நீ எந்த விஷயத்தை உன் கண்கள் மூலமாக வெளியாக்க எண்ணுகிறாயோ, அதைப்பற்றி சிறிது நேரம் தியானித்து அந்த எண்ணத்திற்குத்தகுந்த குறி உன் முகத்தில் தோன்றுமட்டும் உன் கண்கள் அமைதியாய்ப்பார்த்துக் கொண்டிருக்கட்டும். அவ்விதம் செய்யின் சிறிதுநேரத்திற்குள் உன் எண்ணத்தை உன் கண்களே வெளிப்படுத்தும். இவ்விதம் பழகி வருவாயாயின், சீக்கிரத்தில் அன்பு, அனுதாபம், வல்லமை, தைரியம் முதலிய சகல சற்குணங்களையும் உன் பார்வையின் மூலமாகவே வெளியாக்கி மற்றவர்களை சேர்திருத்தவும், உன்னிஷ்டத்திற்கிணங்கி நடக்கச் செய்யவும் தக்க சக்தியைப்பெறுவாய்.

கடைசியாக நீ எவரிடம் பேசினாலும் அவர்கள் கண்களுக்குள் நேராய் நிமர்ந்து பார்த்துப்பேசப்பழகு. எப்பொழுதும் உன் எண்ணங்களையெல்லாம் உன் கண்கள் மூலமாகவே

யோசி, உன் அந்தரங்க ஆலோசனைகளெல்லாம் வெளியே செல்லும் வழி உன் கண்களே என்று நினை. இப்படி செய்து வருவாயாயின், உன் திருஷ்டியின் மகிமையை அளவிட எவராலும் முடியாது. நீ எவர்களை நோக்கிப்பார்த்தாலும் உன் பார்வையானது, இருபுறமும் கருக்குள்ள பட்டயம் போல அவர்கள் இருதயத்தை ஊடுருவச்செல்ல, அவர்கள் பெலன் குன்றி உனக்குள் அடங்குவார்கள் கண்களே ஆத்மாவின் வாசல் என்பதை மனதில் வைத்து மற்றவர்களின் இருதயத்திலுள்ள விஷயங்களையும் அவர்கள் கண்கள் மூலமாயறிந்து கொள்வாயாக. (ரஞ்சிதபோதனி.)

---

## ஐம்புலன்கள், பஞ்சேந்திரியங்கள், அல்லது ஞானேந்திரியங்கள்.

(மேமாத சஞ்சிகையின் 10-வது பக்கத்தொடர்ச்சி)

உருவம், அல்லது ரூபம் பார்வை தெரிதல், நாம் பார்க்கிறவஸ்துக்கவின் பிரமையானது, கண்ணின் சுக்கிலமண்டலத்தை (Cornea,கார்ணிய) உருவி கிருஷ்ண மண்டலத்துவாரம் வழியாய் (Pupil,பியுபில்) பிரவேசித்து கண்மணியையும் (Lens, லென்ஸ்) உருவி ரூப உற்பத்தி சவ்வுமேல் விழும் ஆங்கிலத்தில் (The Sense of Sight, தி ஸென்ஸ் ஆவ்ஸைட்) அந்த உணர்ச்சியானது பார்வைநரம்புவழியாய் மூளைக்குப்போக மனது தெரிந்துகொள்ளுகிறது. கிருஷ்ண மண்டலத்தில் ஜோதிக்கத்தக்கபடி சலனமுண்டாகும். அதிக வெளிச்சத்தில் துதாரம் சுருங்கும், குறைந்திருந்தால்விரியும் இத்தன்மையால் பார்வைக்குத்தேவையான வெளிச்சம் விழிக்குள் பிரவேசிக்கும். அதிகமாகிய வெளிச்சக்கிரணங்களை கறுத்தபசையானது கிரகித்துக்கொள்ளும். வெள்ளைக்குஷ்டரோகிக்கு (Albinoes,ஆல்பினோஸ்) கண்களில் இந்தக் கறுத்த மைப்பசை குறைந்திருப்பதால்அவர்கள் வெளிச்சத்தை செவ்வையாய்ப் பார்க்கமாட்டார்கள். பார்வைசிதலும், கண் கூசும், பூனை முதலிய ஜெந்துக்களுக்கு, பகலைப்பார்க்கிலும் இரவில் செவ்வையாய்க் கண் தெரியும். ஏனெனில் இவைகளின் விழிகளிலிருக்கிற கருத்தமைப்பசையானது கொஞ்சம்வெளுத்திருப்பதால் பகல் வெளிச்சம் கண்களைக்கூச்சும். தளர்ந்த வயதில் வெள்ளெழுத்து உண்டாவதற்குக்காரணம் என்னவெனில் விழிக்குள்ளிருக்கிற நீர்கள் குரைந்து போவதால் ரூப உற்பத்திச்

சவ்வின்மேல் உறுத்தவேண்டிய விம்பமானது சவ்வைத்தாண்டிப்பின்னுக்குப்போகும். ஆகையால் எழுத்துக்களைத்தூர வைத்துப்பார்த்தால் தெரியும். இதற்கு தூரப்பார்வையென்று பேர், கண்ணின் முன்புறம் அதிகமாய் முன்னுக்குவளைந்திருந்தால், விம்பமானது மேற்சொன்ன சவ்வுவரையில் அதற்கு முன்னாகவே நின்றுவிடும். ஆகையால் எழுத்துக்களைக்கிட்டவைத்துப்பார்க்கவேண்டியதாகும். இதற்கு குறிகிய பார்வையென்று பேர். கண்ணுக்குக்காண்கிற இவ்வித விகற்பங்கள், மூக்குக்கண்ணாடியால் நீக்கப்படும. தூரப்பார்வைக்கு, இருபுறமும் மேடாயிருக்கிற கண்ணாடியையும் (Double convex glass, டபில்கான்வெக்ஸ் கிளாஸ்) குறுகிய பார்வைக்கு இருபுறமும் பள்ளமாயிருக்கிற கண்ணாடியையும் (Double Concave Glass, டபில் கான்கேவ் கிளாஸ்) உபயோகித்துக்கொள்ளவேண்டியது. சத்தம் அல்லது ஓசையாவது மன ஆறுதலுக்கும், சந்தோஷத்துக்கும் அறிவுத்தோற்றத்துக்கும் உதவியாயிருப்பதாம். ஆங்கிலத்தில் (The sense of hearing, தி ஸென்ஸ் ஆப் ஹியரிங்) அவ்வோசைகளைக்கேட்கும் கருவி காது உருப்பாயிருக்கின்றது. அது வெளிக்காது, நடுக்காது, உட்காது என மூன்று வகுப்பாயிருக்கின்றது. இவற்றில் வெளிக்காது தலைக்குப்புறம்பே சில புருவங்களையுடையதாய் சற்று வளைவு உள்ளதாய் துவாரமுள்ளதாய், தோலினால் மூடப்பட்டதாயிருக்கிறது. அத்துவாரத்துக்குள்ளே இருக்கும் குரும்பியும் மயிர்களும் பூச்சி, புழு அதற்குட்செல்லாமற்றடுக்கும். காதின் வெளித்துவாரத்தின் உள்ளுறுதியில், வெளிக்காதுக்கும் இடையில் அரைதிட்டமளவுக்கு உருவெளியான ஒரு சவ்வு இருக்கிறது. மகா நுண்ணிய நாலு எலும்புகள் ஓரே கோவையாய் நடுக்காதில் கிடக்கின்றன. அக்கோவையின் ஒரு தலைப்பு தம்பட்டத்திலும், மற்றொரு தலைப்பு வெளிக்காதிலும் தொடுத்திருக்கின்றன. உட்காது எலும்பினாலாகிய மூன்று அறைகளுள்ளதாயும், சிக்கும் முக்கும் சுத்தும சுழற்றலுமுள்ள குடைவாயுமிருக்கிறது. ஃஷி காதின் பகுதி மூன்றில் கேள்விக்கு வேண்டியது உட்காது பகுதிமட்டுந்தான். கேள்வி யுண்டாகிறவிதமெப்படி யெனில—அசைவுண்டவாய்வுக்கு சப்தம் என்று பேர், அந்தச்சப்தமானது காதுக்குள் சென்று, காது உட்சவ்வின்மேல்பட அது அசையும், அந்த அதிர்ச்சியானது எலும்புக்கோவையின் மார்க்கமாகச் சென்று, உட்காதின் ஜலத்தின்மேல் மிதந்து கொண்டிருக்கிற கேழ்வி நரம்புகளின் இழைகளுக்குக்குறுத்தும். கேள்வி நரம்பானது மூளையிலிருந்து கிளம்பி, உட்காதுக்கு

உள்ளுறையாயிருக்கும் சவ்வுக்குள்ளிருக்கும் நீரிலே மிதந்து கொண்டிருக்கும். இந்தச்சவ்வே காதுத்தம்பட்டமாம். மேற்சொன்னபடி வந்த ஒலியின் அதிர்ச்சி கேள்வி நரம்பின் கூந்தலிலேபட்டு அந்த நரம்பின் வழியாய் மூளைக்குச்செல்ல மனது தெரிந்துகொள்ளுகிறது. பழக்கத்தினலே பொருள்களிலிருந்து உண்டாகும் சத்தங்களை இன்ன இன்னதென்றும், அது இவ்வளவு தூரத்திலிருந்து வருகிறதென்றும் நிதானிக்கலாம். காதின் சவ்வு தடித்தல், வெடித்தல், காது நரம்புத் தடைபடுதல், அது சூம்புதல், மூளை வியாதிப்படுதல் முதலிய காரணங்களால் காது மந்தம், செவுட்டுமை, பிரவிச்செவுடு ஆகின்றன. காதில் குரும்பி அதிகமாயிருந்தாலும், பூச்சி, புழு சென்றிருந்தாலும், நல்லெண்ணெயைச்சற்று வெதுப்பி காதில்விட்டு, பருத்திப்பஞ்சினலடைத்து வைத்திருந்து அப்பால் சோப்புத் தண்ணீரால் சுத்தப்படுத்த காது சுத்தமாகும்.

---

## வைத்திய குறிப்புகள்.

அதிக போஜனம்.—அதிக போஜனமும், புத்திக்கு வேலையின்மையும் மனிதன் ஆயுளை கம்மிசெய்யுமெனவும், இவ்விதம் அதிக போஜனம் செய்பவர்கள் யோஜனை செய்யவேண்டிய பிரமியங்களில்லா திருந்தாலும், 60-வயதிற்கதிகமாக ஜீவிப்பது அரிதெனவும், தர்க்கம், சயன்ஸ், சட்டம் இதுகளில் உழைப்பவர்கள் வெகு காலம் இருப்பார்களெனவும் "லான்ஸெட்" என்னும் மெடிகல் சஞ்சிகை கூறுகின்றது.

---

பால் சாப்பிடுவது.—கறக்கும்போது பால் சூடாறுதமுன் சாப்பிடச் சீக்கிரம் ஜீரணமாகிறது. சுண்டக் காய்ச்சின பாலைச் சாப்பிட 100-க்கு ९-பாகம் ஜீரணமாகாமற் போகிறது. பால் திரவமாயிருப்பதால் அதில் உள்ள சத்து முழுவதும் ஜீரணமாகும் ஸ்திதியில் இருக்கவேண்டும். அதிகமாய் ஒரே தரமாய் பாலைச் சாப்பிடுவதற்குப் பதில் கொஞ்சங் கொஞ்சமாய்ச் சாப்பிட ஜீரணம் அதிகமாகிறதென்று தெரிகிறது.

---

அஷ்டநாக முதலாயுள்ள சகலவிஷந்துக்தும் மூலிகைப்பிரயோகம்.—குப்பைமேனி, அவுரி, ஆவாரை, கொல்லங்கோவை, கீழ்காய் நெல்லி இவ்வைந்து வகை இலைகளையும் இடித்துச் சாறுபிழிந்து உள்ளுக்குங்கொடுத்து உடம்பிலும் துவாலைபோடத்தீரும்.

### வேறு.

பேய்ச்சுரை, பேய்ப்புடல், பேய் பீர்க்கு, பேய்க்குமட்டி, சிறுபேய்க்குமட்டி இவைசமூலம் நிழலிலுலர்த்திச் சூரணம்செய்து ஒருவிராகனிடை வெந்நீரிற்கொடுக்க சகல விஷமும்தீரும்.

### வேறு.

தைவேளையிலை, வேலிப்பருத்தியிலை, வெற்றிலை, கரியுப்பு, சுக்கு, மிளகு, வசம்பு, வெள்ளுள்ளி இவைகளை ஓர் நிறையாக சிறு நீர் விட்டுத்தட்டி நாசியில் நசியமிட அடங்கின உயிர் திரும்பும்.

---

### வியாதிகட்கு மூலிகைப்பிரயோகம்.

வெப்பாலைச்சமூலத்தை இடித்து சூரணம் செய்துவேளையொன்றுக்கு விராகனிடை விதம் பசும்பாலிற்கொள்ள குஷ்டம, சில்விஷம் கரப்பன், வண்டுகடி முதலிய வியாதிகள் தீரும்.

அருகஞ்சமூலத்தை சூரணம் செய்து பசும்பாலிற்கொள்ள சகல விஷமும்தீரும். தேகபலமுண்டாகும். நரைதிரை மாறும், நரம்புகள் இறுகும், மூலச்சூடு, வெட்டை, நீர்க்கடுப்பு நீங்கும்.

அமுக்குறாக் கிழங்கைப் பாலிற்கொள்ள விந்துகட்டும், மேனி காந்தியாக்கும். தேகத்திலுள்ள துர்நீர், கபம், சூலை, கரப்பன், பாண்டு, வெப்பு, வெட்டை, வீக்கம், கட்டி, பித்தக்கிறுகிறுப்பு முதலின நீங்கும்.

---

### பிளேக்கும் மண்ணெண்ணையும்.

பிளேக் என்னும் கொள்ளை நோய்க்கு மண்ணெண்ணை மிகவும் சரியான மருந்து என்று அநேக டாக்டர்கள் ஒன்று போல அபிப்பிராயம் கொடுக்கிறார்கள். காப்டன் சிளேச்லிஸ்டன் என்னும் ஒரு டாக்டர் மண்ணெண்ணையினால் பிளேக் வியாதியைத்தடுக்க முடியுமென்றும், இதை முனிசிபல் அதிகாரிகளும், ஆஸ்பத்திரிகாரர்களும் கவனிக்கவேண்டுமென்றும் சொல்கின்றார். இது எங்கும் இலகுவாய் கிடைக்கக்கூடிய வஸ்துவாகையால் எளிய ஜனங்களும் இதை உபயோகிக்கலாமென்று கூறுகின்றார். வெகுநாளைக்குமுன் ஐரோப்பாகண்ட முழுதும் கொடிய பிளேக்நோய் வந்து ஜனங்களை வாரிக்கொண்டுபோனபொழுது நூற்றுக்கு 50பேர்வரை இறந்துபோனார்களாம். ஆனால் ஐரோப்பிய ருஷியாவில் மண்ணெண்ணை விளையும் இடமாகிய பாக்கு என்னும் நாட்டில்மட்டும் பிளேக் வரவில்லையாம். பர்மாவில் சிலகாலத்திற்குமுன் பிளேக் பர

வியபொழுதும் பர்மா மண்ணெண்ணை விளையும் இடமாகிய எனயங் என்னுமிடத்தில் பிளேக் வரவில்லைஎன்றும் நம்பப்படுகின்றது. வீடுகளில் துர்நாற்றமும், அசுத்தமும் உள்ளபாகங்களில் மண்ணெண்ணையைக்கொட்டி, அதன் வாசனைபரவும்படி விட்டுவிட்டாலே பிளேக் பூச்சிகள் இறந்துவிடுமாம்.

---

குடலளவு.—மானிடர்கள் ஒவ்வொருவரும் அவரவர் கரத்தால் எண்சாணுயரமுடையாரென்பது பலரறிந்த உண்மை. அவ்வாறே உடலின் பருமனும் அவரவர் கரத்தால் நாற்சாணேயாம். உடல் உயரத்தால் வந்த உயர்ச்சாண் எட்டை, அதன் பருமச்சாண் நான்கினல் பெருக்கினல் வருவது 32 ஆகவே 32-முழ நீட்டுடையதே குடலளவாம். ஆதலால் முப்பத்திரண்டு பிடி ஆகாரமே ஒருவன் உட்கொள்ளத்தக்கதென்றும், இதில் அதிகமாகாமலும் குறையாமலும் ஒருவன் போஜனம் செய்துவரின் அவனைப்பிணி அணுகாதென்று ஓர் ஐரோப்பிய டாக்டர் அபிப்பிராயப்படுகிறார்.

---

சிரிப்பைப்பற்றி லண்டன் பத்திரிகையின் அபிப்பிராயம்.—லண்டனில் பிரசுரிக்கப்பட்டுவரும் பத்திரிகை யொன்று மனுஷர்கள் பெலனகச் சிரிப்பது நன்மையை விளைவிக்குமென்றுணர்ந்தால் சிரிப்பையே அதிகமாக பாராட்டுவார்கள் என்று சொல்லுகின்றது. இதுவே சில வைத்தியர்களுடைய கருத்தாகவுமிருக்கிறது. ஒரு மனிதன் பெலனகச் சிரிப்பதனல் பசியுண்டாகும். புசிக்கின்ற ஆகாரம் ஜீரணமாகி நல்ல ரத்தம் உண்டாகும். இருதயமும், நுரையீரலும் பலப்படுவதற்கு சிரிப்பே அவசியம் வேண்டுமென்கிற கருத்தினல் அவ்விதம் அப்பியாசம் கொள்ளப்படுகிறது. நன்ருய் ஆராய்ந்து பார்க்குமிடத்தில் சிரிப்பானது அன்னசயம் முதலியவற்றை அதிரச்செய்து பசியுண்டாக்குகிறதல்லவா! இது யாவருக்கும் தெரிந்த விஷயந்தானே.

---

கீரை சாப்பிடுதல்.—சில கீரைகள் சாப்பிடுவதால் மதுரமுடையனவாயிருப்பதுமன்றி, சில வியாதிகளையும் சொஸ்தப்படுத்தக் காரணமாயிருக்கிறது. கீரைகளை அதிகமாகச் சாப்பிடுவதால் வயிற்றில் கிருமிகள் அதிகமாய் உண்டாகும். ஆகையால் கீரை சமைப்பதில் உப்பு கொஞ்சம் அதிகமாய்ச் சேர்த்துக்கொள்ளவேண்டும்.

---

## வர்த்தமானங்கள்.

**சென்னை மாகாண சிவில் ஹாஸ்பிடல் அஸிஸ்டண்டுகள்**— இப்போது சிவில் மெடிகல் அஸிஸ்டண்டுகள் என்று பேர் கொடுக்கப்பட்டிருக்கிற சிவில் ஹாஸ்பிடல் அஸிஸ்டண்டுகள் இனிமேல் சப் அசிஸ்டண்ட் சர்ஜன்களென அழைக்கப்படுவார்களென்று சென்னை கவர்ன்மெண்டார் ஓர் உத்திரவு பிரப்பித்திருக்கிறார்கள்.

**புளியம்பழம்.**—நம் தேசத்தில் உண்டாகும் புளியம்பழத்தை அன்னிய தேசங்களுக்கு அனுப்பப்பட்டு தார்தாரிக் ஆஸிட் (Tartaric Acid) என்னும் ஒருவித உப்பு செய்து நம் தேசத்திற்கு அனுப்பப்பட்டு வருகிறது. இந்த உப்பு அநேக விதமான அவுஷதமுறையில் உபயோகிக்கப்பட்டு வருகிறது. ஒரு படி புளிரசத்திலிருந்து 4 அவுன்ஸ் உப்பு எடுக்கலாம்.

**ஆளைச்சுமந்து பறக்கும் பக்ஷி.**—ஜப்பான்தேசத்து உள்நாட்டிலிருந்து ஜப்பானியன் ஒருவன் ஒருபட்சியின் மேலேறிச் சவாரி செய்துகொண்டு ஆகாய வழியாய்ச் சைபெரியாவுக்குச் சென்றானும். அந்த பட்சி நூதனமான தாகவும் ஒரு மனிதனைச் சுமந்து பறக்கக்கூடியதாகவும் ரூபத்தில் பருந்தைப்போலவும் தீக்குருவியிலும் பெரிய ரூபமுடையதாகவு மிருக்கிறதாம்.

**ஆயுர்வேத வைத்தியம்:**—கொச்சின் ராஜவம்சத்தைச் சேர்ந்த ராஜகுமாரர்களில் ஒருவர் 30,000 ரூபாய் செலவழித்து திருச்சூரில் ஓர் ஆயுர்வேத சாலையை ஸ்தாபிக்கப்போவதாகத் தெரியவருகிறது. இவ்விஷயம் உண்மையாயிருக்கும் பட்சத்தில் ஏழை எளியவர்களுக்கு இந்த ஸ்தாபனம் மிகவும் பயன் படுமென்பதில் சந்தேகமில்லை. மேற்கூறிய சாலையின் அபிவிருத்தியை மனப்பூர்வமாய் விரும்புகிறோம்.

**குன்னூர் தென்னிந்தியா நாய்க்கடி விஷ வைத்தியசாலை.**— இவ்வைத்தியசாலையில்பயித்தியம் பிடித்தவர்களுக்கும், பாம்பு முதலிய விஷ ஜெந்துக்களால் தீண்டப்பட்டவர்களுக்கும், குணப்படுத்தும் ஔஷதப்பரிசோதனையில் மிகவும் ஊக்கமாய் பிரதி தினமும் முயன்று வருகிறார்கள். இத்தென்னிந்தியா நகரவாசிகளுக்கு இஃது ஓர் பெரிய நன்கொடையாகும்.

**Lymphatic Vessels lactels and Atroracic Duct.**

**அங்க அமைப்பிலுள்ள நிண நரம்புகள், ரசதாரை இவைகளைக் காண்பிக்கிற படம்.**



**பர்மா நாட்டில் பைத்தியக்காரர்கள்.**—போன வருஷம் பர்மா நாட்டிலிருந்த பைத்தியக்காரர்களின் தொகையை 10-வருஷத்துக்கு முன்னே அந்நாட்டிலிருந்த பைத்தியக்காரர்களின் தொகையோடொப்பிட்டுப் பார்த்ததில் 100-க்கு 70-வீதம் பைத்தியக்காரர்களின் தொகை அதிகப்பட்டுப் போயிருப்பதாய்த் தெரிந்ததாம். அத்தொகை விருத்தியடைந்திருப்பது ஜனத்தொகை விருத்தியையும் நாகரீகம் அதிகமாகவாக ஜனங்களின் மூளைக்கு அதிக வேலை ஏற்படுப் போனதையும் அனுசரித்திருந்தது என்று சொல்லப்படுகிறது. அம்மாதிரிக் காரணம் சரியாய்த்தானிருக்கவேண்டுமென்று ஊகிக்கும்படியாகவே யிருக்கிறதாம். ஏனெனில் கீழ் பர்மா நாட்டின் (Lower Burma) ஜனத்தொகையையும், மேல் பர்மா நாட்டு (Upper Burma) ஜனத்தொகையையும் எடுத்துக்கொண்டு பார்க்கும்போது, கீழ் பர்மாவிலுள்ள பைத்தியக்காரர்களின் விகிதமே மேல் பர்மாவிலுள்ள பைத்தியக்காரர்களின் விகிதத்தைக் காட்டிலும் அதிகமாயிருக்கின்றதாம்.

## வைத்திய போதினியின் அபிவிர்த்தி கருதிய நன்கொடையாளர்கள்.

திருவாவடுதுறை ஆதீனம் மஹாசன்னிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ, அம்பலவாண தேசிக பண்டார சன்னதி அவர்கள் ரூபாய் 50 கொடுப்பதாக வாக்களித்து அட்வான்ஸாக ரூ. 15 கொடுத்திருக்கிறார்கள். பாக்கி தொகையையும் விரைவில் கொடுத்தாதரிப்பதாக அபிப்பிராயம் கொடுத்திருக்கிறார்கள்.

M.R.Ry., V. T. இராமலிங்க முதலியார் அவர்கள் ரூ. 50.

,, K. அமுர்தலிங்கம் பிள்ளை அவர்கள் ரூ. 30.

அடியில்கண்ட சந்தாத்துகைகளை வந்தனத்தோடு பெற்றுக்கொண்டோம்.

| பெயர். | ரூ. | அ. |
|---|---|---|
| Mr. M. சுப்பையர் | 1 | 0 |
| ,, K. சுப்பையா பிள்ளை | 1 | 0 |
| ,, P. S. முத்துசாமி முதலியார் | 1 | 0 |
| ,, G. Christian | 1 | 0 |
| ,, இராகவ பிள்ளை | 1 | 0 |
| ,, K. R. அய்யா ஐயங்கார் | 1 | 0 |
| ,, ராமசாமி பிள்ளை | 1 | 0 |
| ,, G. சங்கரம் பிள்ளை | 1 | 0 |
| ,, C. செங்கல்வராயபிள்ளை | 1 | 0 |
| ,, A. திருவேங்கட பிள்ளை | 1 | 0 |
| ,, சுந்தரபாண்டிய ஓதுவார் | 1 | 0 |
| ,, லெக்ஷ்மண ஐய்யர் | 1 | 0 |
| ,, J. N. ராமகிருஷ்ணய்யர் | 1 | 0 |
| ,, S. முத்துஸாமி வன்னியனார் | 1 | 0 |
| ,, V. ராகவ ஐய்யங்கார் | 1 | 0 |
| ,, C. ஏகாம்பர முதலியார் | 1 | 0 |
| ,, R. K. ரெங்க ஐயங்கார் | 1 | 0 |
| ,, D. ஆறுமுகம் பிள்ளை | 1 | 0 |
| ,, K. ராமய்யர் | 1 | 0 |
| ,, A. ராஜகோபால ஐயர் | 1 | 0 |
| ,, L. S. கிருஷ்ணசாமிஐயர் | 1 | 0 |
| ,, M. V. ராமஸ்வாமி ஐய்யங்கார் | 1 | 0 |
| ,, நாராயணஸாமி பிள்ளை | 1 | 0 |
| ,, T. R. Salvady Iyer | 1 | 0 |
| ,, வெ. சொக்கலிங்க முதலியார் | 1 | 0 |

| பெயர். | ரூ. | அ. |
|---|---|---|
| ,, M. ராமஸ்வாமி பிள்ளை | 1 | 0 |
| ,, B. R. கிருஷ்ணஸாமி நாயக்கர் | 1 | 0 |
| ,, நாயினா பிள்ளை | 1 | 0 |
| ,, K. ராமகிருஷ்ண செட்டியார் | 1 | 0 |
| ,, P. W. Vyaya திருவேங்கட பிள்ளை | 1 | 0 |
| ,, A. கோபால முதலியார் | 1 | 0 |
| ,, P. சாம்பமூர்த்தி ஐய்யர் | 1 | 0 |
| ,, A. நாராயண ஐயங்கார் | 1 | 0 |
| ,, D. S. Iyengar, (Simla) | 1 | 0 |
| ,, M. வெங்கடநரஸிம்மம் | 1 | 0 |
| ,, N. வரதாச்சாரியார் | 1 | 0 |
| ,, ராஜகோபால ஐயர் (வில்லியநல்லூர்) | 1 | 0 |
| ,, T. திருமேனிசெட்டியார் | 1 | 0 |
| ,, மு. ஆறுமுகம் பிள்ளை | 1 | 0 |
| ,, C. ராமசாமி படையாச்சி (ஜோகன்ஸ்பர்க்) | 2 | 4 |
| ,, P. கந்தையா, (Kapar) | 0 | 14 |
| ,, A. R. ராஜகோலய்யங்கார் | 1 | 0 |
| ,, Manager, Durai Rajah & Co. | 1 | 0 |
| ,, A. S. மரியதாஸ்பிள்ளை | 1 | 0 |
| ,, சீனிப்பண்டிதர் | 1 | 0 |
| ,, A. L. M. L Markar | 1 | 0 |
| ,, T.A. Lazarus ferindo | 1 | 0 |
| ,, M. சாமினாயகம் | 1 | 0 |